## 6. பகிர்ந்து சாப்பிட வேண்டும்.

ஒரு வீட்டுக்குள் இரண்டு பூனைகள் நுழைந்தன.
சமையல் அறைக்குள் சென்றன.
அங்கே தட்டில் சூடான ஒரு ஆப்பம் இருந்தது.
அதைத் தூக்கிக் கொண்டு பூனைகள் வெளியில் வந்து தோட்டத்துக்குள் சென்றன.
"யாருக்கு அதிக பங்கு ஆப்பம்?" என்பதில் பூனைகளுக்குள் சண்டை வந்தது.
ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுப்பதாகவும் இல்லை.
இதைப் பார்த்த ஒரு குரங்கு அங்கே வந்தது.
"நான் சரியாகப் பங்கு போட்டுத் தருகிறேன்" என்றது.
பூனைகள் அதை ஒப்புக் கொண்டன.
ஒரு தராசில் ஆப்பத்தைத் துண்டு துண்டாக்கிக் குரங்கு வைத்தது.
"ஆஹா இப்பங்கு அதிகம், ஓ அப்பங்கு அதிகம்" என்று கூறிக் கொண்டே கொஞ்சம் கொஞ்சமாக ஆப்பத்தைக் குரங்கே சாப்பிட்டு முடித்து விட்டது.
கடைசியில் பூனைகள் ஏமார்ந்து பொயின.
இனி மேல் பொறாமையுடன் இருக்கக் கூடாது என்று உணர்ந்தன.